செ.வெ.எண்: 56/2017 நாள்: 23.01.2017

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

**ஆதார் எண் பெற்றுத் தருவதாகக் கூறிபொதுமக்களிடம் பணம் வசூலிக்கும் நபர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்**

**மாவட்டஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப.,தகவல்**

*******

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதார் சேர்க்கை பணி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வாயிலாக நிரந்தர சேர்க்கை மையங்களில் (PEC) நடைபெற்று வருகிறது. நிரந்தரசேர்க்கைமையங்களில் நடைபெறும் புதிய ஆதார் பதிவிற்கு கட்டணம் ஏதும் கிடையாது. இது ஒரு கட்டணம் இல்லா சேவை ஆகும். ஆனால் தனி நபர்கள் சிலர் விரைவாக ஆதார் எண் பெற்றுத் தருவதாகக் கூறி பொது மக்களிடம் பணம் வசூலிப்பதாகத் தெரியவந்துள்ளது.

பொது மக்களை ஏமாற்றும் இத்தகையநபர்கள் மீதுகடும் நடவடிக்கைஎடுக்க இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) வழிமுறைகளை வகுத்துள்ளது. இந்த வழிமுறைகளின்படி, பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்கும் நபர்களிடமிருந்துரூ.10,000/- வரை அபராதமாக வசூலிக்கவும், ஓராண்டு வரை சிறைதண்டனை விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் ஆதார் எண்ணை பெற தமிழக அரசு நிறுவனங்களால் மாநகராட்சி அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகிய இடங்களில் நிர்வகிக்கப்படும் நிரந்தர சேர்க்கை மையங்களை மட்டுமே நேரில் அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சஜ்ஜன்சிங் ரா சவான், இ.ஆ.ப.,
மாவட்டஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.

/உண்மைநகல்/ உத்தரவுப்படி/

உசூர் மேலாளர் (பொது)

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.